06.08.2025

I.D.O.P.No. 215 / 2024

**ம.சா.1 – ஜான் விசுவாசம்**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 29.06.2012–இல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு நான், என் அண்ணன், என் அம்மா ஆகியோரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். என் அண்ணன் சகாயராஜிற்கு அதற்கு முன்பே திருமணமாகி குடும்பத்துடன்தான் வசித்தார் என்றால் சரிதான். என் அண்ணியின் பெயர் பவுல் மேரி. நான் 2008 முதல் 2022 வரை சிங்கப்பூரில் வேலை பார்த்தேன். நான் தற்போதுவரை சிங்கப்பூரில்தான் வேலைப்பார்த்து வருகிறேன் என்றாலும், 2022 வரைதான் சிங்கப்பூரில் வேலை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலைப்பார்த்ததால் எனக்கு வெளிநாட்டிலும், உள்ளூரிலும் நண்பர்கள் அதிகம் என்றால் இல்லை. எனக்கு குடிப்பழக்கம், சிகரெட் பழக்கம் போன்ற பழக்கங்களின் காரணமாக எனக்கு அதிகமாக நண்பர்கள் உண்டு என்றால் சரியல்ல. எனக்கு தவறான பெண்களுடன் அதிக பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. என்னுடைய இந்த பழக்கத்தை திருமணத்திற்கு முன்பிருந்தே என் தாயார் கண்டித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் என்னுடன்தான் வசித்து வருகிறார். எனக்கு திருமணத்திற்கு முன்பே வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்து அவர் பெயரை தான் பச்சை குத்தியிருந்தேன் என்றாலும், திருமணத்தின்போது மாதா படத்தை பச்சை குத்தியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. குடிப்பழக்கத்தின் காரணமாக திருமணமான நாள் முதல் ../

எதிர்மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்திவந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு ஒரு பெண் குழந்தை 2016–ஆம் ஆண்டு பிறந்தது. குழந்தை தற்போது எதிர்மனுதாரருடன்தான் உள்ளது.

**(எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.